டிருக்கிற வியாபாரத்தை விரைவில் 2,000, 3,000 என்று விஸ்தரிக்கலாமா என்று அரசு பரிசீலித்துக்கொண்டிருக்கிறது. இதைப் பயன்படுத்திக்கொண்டு, வியாபாரிகள் அதிக லாபம் சம்பாதிக்காமல் ஒரு நியாயமான விலையில் விற்க அவர்கள் முன் வருவார்களானால் கூட்டுறவுத் துறையின் நடவடிக்கை இதோடு நிற்கும். இல்லையென்றால் வியாபாரிகள் இந்த அரசுக்கு கெட்ட பெயர் உண்டாக்க வேண்டும் என்ற நடவடிக்கைகளில் ஈடுபடுவார்களானால்—அரசாங்கம் எல்லா இடங்களிலும் அரிசி விற்பதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஆ) மணலி உரத் தொழிற்சாலையில் காண்ட்ராக்ட் தொழிலாளர்களுக்கு வேலை மறுப்பு.

திரு. உ. ரா. வரதராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மணலியில் உள்ள உரத் தொழிற்சாலையில் 1,400 காண்ட்ராக்ட் தொழிலாளர்கள், கடந்த ஜூன் மாதம் முதல் வேலை மறுக்கப்பட்டிருக்கிறார்கள். அண்மையிலே இது பற்றி தொழிலாளர் நல இணை ஆணையர் நடத்திய பேச்சுவார்த்தையிலே முறிவு ஏற்பட்டிருக்கிறது. பேச்சுவார்த்தையிலே முறிவு ஏற்படுவது என்பது சகஜமான ஒன்றுதான் என்றாலும், இதிலே ஒரு சிக்கலான பிரச்சினை இருக்கிறது.

அந்த காண்ட்ராக்ட் தொழிலாளர்கள், ஒப்பந்தக்காரர்களின் கீழ் வேலை செய்கிறவர்கள். அந்த ஒப்பந்தக்காரர்கள் அந்தத் தொழிலாளர்களுக்கு மீண்டும் வேலை கொடுக்கத் தயாராக இருக்கிறார்கள். ஆனால் பிரின்சிபல் எம்ப்ளாயர் என்கிற முறையில் மத்திய பொதுத்துறை நிறுவனமான சென்னை, உரத்தொழிற்சாலை ஒப்பந்தக்காரர்கள் வேலை தர முன்வந்தாலும், அதற்கு இசைவு தர மறுக்கிற காரணத்தால்—அவர்கள் மீண்டும் வேலைக்குத் திரும்ப முடியாத நிலையில் இருக்கிறார்கள். இதில் உயர்நீதிமன்றங்கூட தலையிட்டு, அவர்கள் வேலை செய்யக்கூடிய இடங்களில், மாற்றுப் பணியாளர்களைப் புதிதாக நியமிக்கக் கூடாது என்று ஒரு தடையை விதித்திருக்கிறது. அந்த வழக்கை தொழிற்சங்கம் வாபஸ் பெற வேண்டும் என்று பிரின்சிபல் எம்ப்ளாயர்—சென்னை உரத் தொழிற்சாலை—வலியுறுத்துகிறது. தொழிற்சங்கமும் அந்த வழக்கை வாபஸ் பெறத் தயாராக இருக்கிறது. ஆனால் அவர்களுக்கு வேலை கொடுக்கப்பட வேண்டும் என்று சொல்லுகிறது. முதலில் 1,400 பேருக்கு வேலை கொடுக்க முடியாது—ஒரு சிலருக்குத்தான் கொடுக்க முடியும் என்ற நிலை அந்த நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்டிருக்கிற காரணத்தால் அந்த பிரின்சிபல் எம்ப்ளாயர் ஒத்துழைப்பு தராத காரணத்தால் இந்தப் பேச்சுவார்த்தையிலே முறிவு ஏற்பட்டு, அங்கே ஒரு பதட்டமான சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. இப்படி இசைவு மறுக்கிற அந்த பிரின்சிபல் எம்ப்ளாயருக்கு எதிராக அந்த ஆலையின் வாயிலிலே ஆர்ப்பாட்டம் நடத்தவோ—

உண்ணாவிரதம் இருக்கவோ கூட அந்தத் தொழிலாளர்களின் உரிமை மறுக்கப்பட்டிருக்கிற காரணத்தால் இந்தப் பிரச்சினை மேலும் சிக்கலாகியிருக்கிறது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதில் தலையிட்டு 1,400 தொழிலாளர்களும்—கடந்த ஜூன் மாதத்திலிருந்து வேலையில்லாமல் இருக்கிற அவர்கள் எல்லோரும்—வேலைக்குத் திரும்ப ஏற்பாடு செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு.வரதராசன் அவர்கள் இங்கே விவரித்திருக்கிற பிரச்சினையை அரசு பரிசீலனைக்கு எடுத்துக் கொண்டிருக்கிறது. அந்தத் தொழிற்சாலையில் பணியாற்றுகிற தொழிலாளர்களுக்கு மீண்டும் எப்படியாவது வேலை வாங்கித் தர வேண்டும் என்ற அடிப்படையில் பிரின்சிபல் எம்ப்ளாயர் என்கிற அந்த நிறுவனத்தோடு பேச்சு வார்த்தை நடத்துவதற்கான முயற்சிகளை அரசு மேற்கொள்ளும் என்று இங்கே தெரிவிக்க விரும்புகிறேன்.

(முற்பகல் 10–10.)

(இ) விளவங்கோடு தாலுக்காவிலுள்ள முந்திரித் தொழிற்சாலைகளுக்கு கச்சா முந்திரி செல்வதை கேரள அதிகாரிகள் தடுத்தல்.

திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு தலைவரவர்களே, என்னுடைய கன்னியாகுமரி மாவட்டத்திலே கேரளா பார்டர் விளவங்கோடு தாலுகாவின் பகுதியிலே பல்வேறு முந்திரி தொழிற்சாலைகள் இருக்கின்றன. அந்த முந்திரி தொழிற்சாலைகளுக்கு கச்சா முந்திரி தமிழகத்தினுடைய பல்வேறு பகுதிகளிலிருந்து கொள்முதல் செய்துகொண்டு போகிறார்கள். ஏறத்தாழ 9 தொழிற்சாலைகள் கேரளாவினுடைய எல்லைப் பகுதியில் இருக்கின்றன. கேரளாவினுடைய சாலையைக் கடந்துதான் அந்தத் தொழிற்சாலைகளுக்குச் செல்ல வேண்டி இருக்கின்றது. கேரளா சாலையிலே நம்முடைய கச்சா முந்திரியை லாரிகளில் கொண்டு போகும் போது கேரளா போலீஸ் அதைத் தடுத்து நிறுத்தி 'சீஸ்' பண்ணுகிறார்கள். ஆகையினால் அந்த 9 தொழிற்சாலைகளுக்கும் கச்சா முந்திரி கொண்டுபோக முடியாத சூழ்நிலை இருக்கிறது. அங்கு ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள். ஏறத்தாழ ஒரு மாத காலத்தில் அந்தத் தொழிற்சாலைகள் மூடப்படுகின்ற நிலைமை இருக்கின்றது. அந்த ஆலைகளை நடத்துகின்றவர்கள் எல்லாம் கேரள முதலாளிகள். நமக்குக் கிடைப்பது தொழில் மட்டும்தான். ஆனால் தொழிலாளர்களுக்கு வேலை கிடைக்காத நிலைமை இருக்கின்ற காரணத்தால் தயவுசெய்து கேரள மாநில